பதிவு எண்—M 5720 வெள்ளிக்கிழமையில் - குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை--6 குருகுலம், மாம்பாக்கம்; செய, வைகாசி 22 4—6—54 தளிர்-33

445

## வழிபாடு

சகமலா தடிமை யில்லை தானலால் துணையு மில்லை
நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை ஐயனை யாற னார்க்கே.

(அப்பர்)

வாழ்வுக்கு வழிபாடு தேவை. தேவையான அவ் வழிபாடு பொருளுடையதாயிருத்தல் அவசியம். பொருளற்ற வழிபாடு கண்மூடி வழக்கங்களைப் பெருக்கத் துன்பஞ் செய்யும். வழிபாடு என்னும் நினைவு தோன்றும் போதே மக்கட்கு இறை நினைவு தோன்றுவது இயல்பு. வழிபாடு, இறைக்கே உரியதாய் இறையையே சாரும். வழிபாடு:- அக வழிபாடு, புற வழிபாடு எனப்படும். நம் சமய குரவர்கள் தமது மறைமொழிகளின் தொடக்கத்திலேயே 'என் உள்ளங் கவர் கள்வன்' 'பிரியாது வணங்குவன் எப்பொழுதும்' 'நினைக்கின்றேன் மனத்துன்னை' 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என முறையே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் நால்வரும் அகவழிபாடு சிறந்ததென்றும், உலகம் உணர்ந்து அதை அடைதற்குரிய புற வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்பதைக் கருத்தாகக் கொண்டு குறித்தனர்

புற [illegible]னத்தை அலைய வைத்துக் கொண்டு ஏதஞ் செய்ய இல்லை. எனவே வழிபாட்டுக்கு அடிப்படையான தியானத்தில் பயிற்சி கொண்டு அப்பயிற்சியின் விளைவால் பன்மை உணர்வு கெட்டு இறையருளை நாடுதல் வேண்டும்.

புற வழிபாடு அக வழிபாட்டுக்கு ஏணி போன்றது; இன்றியமையாதது; வேண்டற்பாலது. புற வழிபாட்டினைப் புறக்கணிப்போர்க்கு அக வழிபாடு கூடுதல் அரிது! அரிது!! அரிது!! என [illegible] அறைகூவும் அப்பரடிகளின் பாட்டினை [illegible]

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. 6 | 0 | 0 |
| தனித் தாள் | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | |
| கையொப்பம் | ரூ. 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| இலை | செய, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 4-6-54 வெள்ளி. | 33 |

# தனித் திருமண முறை

## (Special marriage bill)

பெரும்பாலான திருமணங்கள் நேர்ந்தபடி நடப்பதனால் கணவன் மனைவியரிடம் வரம்பற்ற ஒத்த அன்பு இருக்குமென்று எதிர் பார்த்தற் கில்லை. அன்பு குறைந்த இடத்தில் பூசல் உண்டாவது உறுதி. அன்பில்லாதவரை ஒன்றுசேர்த்துக் கட்டுப்படுத்துவதை விட அவர்கள் விரும்பினால் பிரிந்து போவதற்குச் சட்டம் இடம் தருவது நல்லது.

இந்தப் பிரிவை எளிதாகப் பெறக்கூடிய முறையில் புதிய திருமணச் சட்டமொன்று இயற்றப் படுகிறது. இதன்படி ஓராண்டு காலம் பிரிந்திருந்து இனிக்கூடி வாழ முடியாதென்று தெரிவித்துப் பிரிவை இருவரும் விரும்பினால் அவர்கள் பிரிந்துவிடலாம். (இந்தப் பிரிவுக்கு மனுச் செய்து கொள்ளத் திருமணத்திற்குப்பின் மூன்றாண்டுகள் கழிந்திருக்க வேண்டும்) நாட்டுப்பேரவை (Council of state) அங்கத்தினர் பலரும் இத் திருமண முறையை வரவேற்றனர் பெண்பாலர் தமக்குள்ள அடிமைத் தளைகளில் ஒன்று இதனால் அவிழ்க்கப்படுவதாகக் கருதுகின்றனர். அது உண்மையும் ஆகும்.

பிரிவு இவ்வளவு எளிதில் கிடைக்கும்படிச் சட்டமியற்றுவதில் தவறொன்றும் இல்லை. அன்பில்லாதவர்கள் பிரிந்து விடுவது சமயத்திற்கோ, மன்பதைக்கோ தீங்கு செய்யுமென்று நினைத்தற்கில்லை சீர்திருத்தத் தாய் ஔவையார், கணவன் மனைவியரில் ஒருவர் கொடுமையால் மற்றவர் துன்புறுவதை விட பிரிந்துபோவது நல்லதென்று எடுத்துரைத்ததாகக் கதை வழங்குகிறது. எனவே பிரிவு சான்றோர்களாலும் ஏற்கப் பட்டதே என்பது விளங்கும்.

ஆனால் பிரிந்தவர்களின் பிற்கால வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மனைவியின் வஞ்செயல்களிலிருந்து விடுதலை அடைய கணவன் பிரிந்துவிட வேண்டுமென்று கூறிய ஔவையார், அவன் மீண்டும் வேறு பெண்ணை மணக்கலாமென்று கூறவில்லை. துறவை மேற்கொள்ள வேண்டுமென்றே அவர் தெரிவித்தார்.

இப் புதிய திருமண முறை பிரிந்தவர்கள் ஓராண்டு கழித்து மறுமணம் செய்துகொள்ள இடந்தருகிறது. இந்நாட்டு நாகரிகத்திற்கு இது மாறுபட்டதாய் உள்ளது.

வாழ்க்கை முறையை வகுத்த வள்ளுவர் அறமென்றே சொல்லக்கூடிய இல்வாழ்க்கை அமையாமற் போனால், பழிப்பில்லாத துறவறமும் நல்லதுதானென்று கூறி, இல்லறம் துறவறம் என்ற இரண்டினையே குறிப்பிட்டார். இல்வாழ்க்கையை வெறுத்துப் பிரிந்தவர் மறுமணம் செய்து கொள்வது அவர் நினைவுக்கு வராத ஒன்று.

பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நூல்களில் கூறிய மன்பதை இன்றும் ஒழுக வேண்டுமென்னும் கட்டாயம் இல்லை. காலத்தோடு ஒட்ட ஒழுகாமல், தனது சட்ட திட்டங்களில் மாற்றங் காணாத மன்பதை தேங்கிக் கிடந்து அழிந்து விடுமென்பது உண்மை. இன்றைய இந்திய மன்பதையும், அதன் சமயமும் முறையே மங்கிக் கிடப்பதற்கும் எண்ணிக்கையில் குறைந்ததற்கும் காரணம், அதன் சட்ட திட்டங்கள் சில நூற்றாண்டுகளாக மாற்றப் பெறாமல் தேங்கிக் கிடந்ததேயாகும்.

எனினும், மாற்றங்கள் செய்யும்போது கால அளவுக்குக் கட்டுப்படாத சில அடிப்படை உண்மைகளிலிருந்து விலகி விடாதபடி நம்மைக் காத்துக் கொள்ள வேண்டுவதும் முதன்மையாகும்.

திருமணம் வெறும் ஒப்பந்தமாக மட்டுமில்லை. அது உயிர் கலைப்பிணிக்கும் அறச் செயலாகவும் உள்ளது. ஒருவர் பலரோடு முழுதும் தொடர்பு கொள்ளுதல் இயலாதென்னும் உண்மை என்றும் மாறுவதில்லையாதலால்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# "விளையாட்டு வழியே....."

(நாராயணசாமி)

(முன் தொடர்ச்சி)

ஆதிகால மனிதன் கற்களை ஆயுதங்களாக, தனக்கு வேண்டிய பொருள்களாகச் செய்து உபயோகித்தான். குழந்தைகளும் கல்லையே வீட்டு வாயில் படியாகவும், சமைக்கப் பாத்திரங்களாகவும், கடைச் சாக்காகவும் உபயோகித்து விளையாடுகின்றனர். செங்கல் தூள் மசாலைபாகிறது. ஓடு சாதமாகிறது. கல்லில் உள்ள பள்ளம் பாத்திரமாகிறது சண்டைக்குக் கல்லே கத்தியாகவும் தடியாகவும் உபயோகப் படுகிறது.

தென்னை ஈர்க்கினை வில்லாகவும் அம்பாகவும், உபயோகிக்கின்றனர். குழந்தைகளின் பழக்கங்கள் முதலில் ஆதிகால மனிதன் செயலையே யொத்திருக்கிறது. நாகரிக முறைகளும் ஆதிகால மனிதனுடையதே.

மனித இனத்தை உற்பத்தி செய்த ஆதிகால மனிதர்களின் நடையுடை, பாவனை முறைகளை குழந்தைகளிடம் காணப்படுகின்றன. காட்டுமிராண்டியைப் போல் ஆதிகால மனிதன் அம்மணமாக ஆடையற்றுத் திரிவானாகத் திரிந்தான் கண்டவைகளை எல்லாம் தின்றான். ஓமிட்சித்தன் கருத்தைத் தெரிவித்தான், சிறிதும் சுத்தமற்று வாழ்ந்தான்.

அவ்விதமே குழந்தைகளும் உடலில் உடை அணிவதைப் பற்றியோ, உடலைச் சுத்தம் செய்வதைப் பற்றியோ, உணவை உண்பதிலேயோ அக்கறை கொள்வதில்லை கவனம் செலுத்துவதுமில்லை தனக்கு வேண்டியதை ஒலியால், குறிப்பிட்டுக் காட்டுகிறது. கண்டவைகளையெல்லாம் எடுத்து வாயில் வைக்கிறது. பிறகு, நாளாக ஆக, மனித சமூகத்தில் தாய், தந்தை, உறவினர், ஊர், நாடு ஆகியவைகளை அறிந்து அந்தந்த சூழ்நிலைக்கேற்பத் தன்னைப் பொருத்தியமைத்துக் கொள்ளுகிறது.

ஆனால், நாகரிகம் முதிர்ந்த வாலிபப் பருவத்தினரும், வயதானவரும் கூடத் தானே விளையாடுகிறார்கள். அவர்கள் விளையாட்டு ஆதிகாலச் செய்கையினின்று எவ்வளவோ தள்ளியிருக்கிறதே ஆம்! மனிதனின் மனமும் அறிவும் சேர்ந்து ஆதிகாலச் செய்கையினின்று பிரித்துவிட்டது.

லாஸஸ் என்பவர் 'பொழுது போக்குக்காக விளையாடுகிறார்கள் என்று கூறுகிறார். காரல் குரூஸும், ஸ்டான்லி ஹாலும் சொல்வது போல் பொழுது போக்குக்காக மட்டுமன்று வாழ்க்கைக்குத் தம்மை ஆயத்தம் செய்துக் கொள்ளவும் விளையாடுகின்றனர். அவ்வாயத்தம் ஆதிகால மனிதன் செய்கையிலிருந்து தொடங்குகிறது. வெறும் பொழுது போக்கெனின் போட்டி மனப்பான்மை ஏற்படப் போவதில்லை. மன வெழுச்சிகளை வெளியிடவும் வழியில்லை.

விளையாட்டில் ஊக்கம் காட்டாதவர்கள் வேண்டுமானால் பொழுது போகவில்லையே என்று விளையாடலாம். ஆனால் பிள்ளைகள் விளையாட்டின் முக்கியம், விளையாடி விவேகம் பெறுதலே.

'முடிவாக மன எழுச்சியை வெளிப்படுவது' என்னும் கொள்கை பல விதத்திலும் பொருந்தியிருக்கிறது. குழந்தைகளின் உடல் நலத்தைவிட மன நலத்தைப் பொறுத்தே விளையாட்டுகள் அமைகின்றன. கோபம், வீரம், நம்பிக்கை சாதுரியம், தந்திரம் போன்ற மன வெழுச்சிகள் விளையாட்டு மூலமே வெளிப்படும். குழந்தைகள் அநுபவத்திற்குட்படாத வேலைகளில் அவர்கள் தம் அறிவைச் செலுத்தி செய்ய முடியாது. அவ்வாறு வற்புறுத்துவதும் அறியாமையே. அவர்களின் திறனை அளவிட வேண்டுமானால் விளையாட்டே அதற்குரிய சாதனம்.

கைகால்களை இலாவகமாக உபயோகித்தல், வெற்றி தோல்வியில் நிதான மனப்பான்மை, கட்டுப்பாட்டிற்குள் அடங்கல்—முதலிய பண்புகள் விளையாட்டேயன்றி வேலையால் முடியாது. பெற்றோர்க்கு அடங்காப் பிள்ளை விளையாட்டில் தலைவர்க்கு அடங்கி நடப்பதைக் காண்கிறோம்.

வாழ்க்கைக்கு மனப் பண்புகள் நன் முறையில் அமைதல் அவசியம். அறியாத நிலையில் இருக்கும் பிள்ளை புதிய சூழ்நிலைக்கேற்பத் தன்னை மாற்றியமைத்துக் கொண்டே இருக்கும். இவ்வெழுச்சியெல்லாம் தேர்ச்சி பெறுவதுடன் எழுத்துக் கல்வியும் பெறுவதே கற்றலாகும். ஆகவே வெறும் ஏட்டுக்கல்வியோடன்றி, வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியையும் பெறுவதே கல்வியாகும். அதற்கேற்ற சாதனம் விளையாட்டன்றி வேறு எது?

பொதுவாக இக்காலப் பள்ளிகள் அனைத்தும் குருகுலப் பள்ளிகளாக மாறினால்தான் நாடு நலம் பெறும்" என்னும் கொள்கை வலுத்திருக்கிறது. கல்விச்சீர்திருத்தங்களும் இம்முறையில் மாறி உயர்தல் நல்லது என்று தோன்றுகின்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# விஞ்ஞான விளக்கமும் மெய்ஞ்ஞான மேன்மையும்

(வே. ந. நாராயணன்)

(முன் தொடர்ச்சி)

இவ்வாறு விஞ்ஞானத்துடன் புற நாகரிகம் அடிப்படையான தொடர்பு கொண்டுள்ளது. விஞ்ஞானத்திற்குப் புற நாகரிகம் கடைக்காலாக விதையாக அமைந்துள்ளது எனக் கொள்க.

(இங்கு மெய்ஞ்ஞானத்திற்கு அக நாகரிகம் அடிப்படையாய் அன்னையாய் அமைந்திருந்ததெனவும் நினைவிற் கொள்க)

இனி, இத்தகைய வளர்ச்சி நிலை மனிதர்கட்கு மட்டுமே எனக் காண்போம்.

பொதுவாக "வாழ்க்கையில் வளர்ச்சி" என்பது மனிதருக்கன்றி மற்றவற்றிற்கு (பிற உயிரினங்கட்கு) உரியதன்று.

காரணம், ஆறும் அறிவான பகுத்தறிவை மனிதனன்றி வேறு உயிர் வாழும் பிராணிகள் பெறாமையேயாம்.

நம்போல் ஐம்பொறிகளையும் அதனாலாம் புலன்களையும் பெற்ற மிருகங்களும் பட்சிகளும் உடலில் வளர்ச்சி காண்கின்றனவே யொழிய வாழும் வகையிலே மாற்றம் காண்பனவாக இல்லை.

மிருகங்களும் பட்சிகளும் இனத்திலே விருத்தி காண்கின்றனவே யொழிய வாழுந் தன்மையிலே முன்னேற்றம் காண்பனவாக இல்லை, வளர்ச்சி காண்பனவாக இல்லை.

ஆனால், மனிதனோ உடலில் வளர்ச்சி காண்பதும், இனத்தில் விருத்தி காண்பதுமே யன்றி, வாழும் முறையிலும், வாழுந் தன்மையிலும் வளர்ச்சி காண்பவனாய், முன்னேறுந் திறமை பெற்றவனாக உள்ளான்.

இத்தகைய வளர்ச்சித் தன்மையை மனிதன் பெற்றமைக்குக் காரணம், பகுத்தறிவென முன்பு கண்டோம். அத்தகைய பகுத்தறிவுந் திடீரெனத் தோன்றியதுமன்று, எண்ணும் மனத்தின் நல் முடிபால் அறிவெல்லை சிறிது சிறிதாக விரிவடைந்து பகுத்தறிவென அமைகின்றது. இத்தகைய பகுத்தறிவு பல படிகளாக, பலமனப் போக்குகளாக (ஆசை, சுய நலம் போன்ற போக்குகள்) விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிப்படைத் தொடக்கத்தினின்றுந் தொடர்ச்சியாகத் துணைபுரிந்தன. அதனை ஒருவாறு பொருந்தக் கூடிய நிலையில் முறைப் படுத்தி ஆராய்ந்து பார்ப்போம்.

உலகிலுள்ள அசைவனவும் அசையாதனவுமான பொருள்கள் அனைத்திற்கும், உயிரினங்கள் முழுமைக்கும் "சக்தி" என்று ஒன்று உண்டு. அவைகள், அச் சக்திகள், பயன்படுத்தும் போதே ஒவ்வொரு நிலையில் வெளித் தோன்றுவன.

தேங்காயை, அசையாப் பொருளான கருங் கல்லில் விரைந்து மோதும் போது தேங்காய் உடைந்து கருங்கல் உடையாத சக்தியைப் பெற்றிருத்தலை அறிக. அவ்விதமே தேங்காயும் மனிதனுக்குப் பயன்படும் விதத்தில் சக்தி பெற்றிருத்தலை அறிக.

நீர்த் தேக்கத்தில் அசைவற்றிருக்கும் தண்ணீர், குழாயில் செலுத்தப் படும்போது சக்கரங்களைச் சுழற்றி மின்சாரத்தை யுண்டு பண்ணும் சக்தியைப்பெற்றிருத்தலையும் அறிக.

இன்னும் நிலைச் சக்தி (Potential energy) சலனச் சக்தி (kinetic energy) போன்றவையாகவும் பிரித் துரைக்கலாம். இவைப் பற்றிய விளக்கத்தை இங்கு விவரிக்காவிடினும் தவறில்லை.

இத்தகைய சக்தியை, மனிதன் அறிவால் வெளிப்படுத்தி வளர்த்து உயர்ந்தான்.

அதன் பயனாகத் தான் இயற்கையை வசப் படுத்தாமல் வாழ்ந்த மனிதன், இயற்கையின் வேலையாளாக இருந்த மனிதன், இயற்கையைத் தன் தேவைகட்காகப் பயன்படுத்தத் தொடங்கினான்.

அந்த காலந்தான், மனிதனுடைய முன்னேற்றம், வளர்ச்சி துவங்கிய காலமாகும்.

சக்தியைப் பயன் படுத்தும் ஆற்றலை யளித்த அந்தவொரு அறிவால் தான் மனிதன் மிருகங்களினின்றுந் தன்னை வேறு படுத்திக் கொண்டான்.

அந்தவொரு பகுத்தறிவால் தான், மனிதன் மனிதனைத் தின்று வாழ்ந்த அந்த நிலையை மாற்றினான்.

அந்தவொரு அறிவால்தான் கருவிகளைக் கண்டறிந்து பயன் படுத்துந் திறமையைப் பெற்றான். வளர்ச்சிக்கு அறிவே

காரணமெனினும்: நியாயம், அநியாயம், சரி, தவறு போன்றவற்றை யுணர்த்தும் அறிவைத் திடீரெனப் பெறுவதென்பதும் இயலாமையே.

மனிதனுக்குப் பகுத்தறிவு இருந்த போதிலும் அதனை மனிதன் முதன் முதலே அறிந்து கொள்ளவில்லை; பயன் படுத்தவும் இல்லை. அது பல மனப்போக்குகளாகவே இருந்து பகுத்தறிவென உருவானது.

அறிவால்தான் விளக்கங்கண்டானெனினும் விளக்கங் காணுவதற்கு முன் நடத்திய ஆரம்ப செயல்களை அறிவுச் செயலெனச் சொல்வதை விட, ஆசையாலும், சுயநலத்தாலும் எழுந்த எண்ணத்தின் செயலென இயம்பலே பொருந்தும்.

அறிவேதான் மூதற் காரணம், அடிப்படைக் காரணமெனின் நாட்டிலுள்ள அத்தனை மக்களும் சிறந்த அறிஞர்களாகவே இருக்கலாமே ஆனால், அவ்வாறில்லை. காரணம் அதுவென்பது பலவித மனப் போக்கின் எண்ணப் போக்கின் கல்முடிவேயாம்.

அத்தகைய மனப் போக்கிலே மனித முன்னேற்றத்திற்கு ஆதியில் உதவிய பொதுவான மனப்போக்கு ஆசையும், சுயநலமும் எனக்கொள்க.

பொதுவாக முன்னேற்றம் என்பதும் கூட அத்தனை மனிதர்களும் சேர்ந்து கண்டு பிடிப்பதென்றே கூற முடியாது. தனி மனிதனின் உள்ளத்தெழுச்சியே தனி மனிதனின் அறிவுத் திறனே. தனி மனிதனின் முன்னேற்றமே பொதுவாக முன்னேற்றத்திற்கு ஆதாரமாய் உள்ளதென்பதையும் அறிய வேண்டும்.

ஆதிகால மனிதன் மனப் போக்கிலே குழந்தையை ஒத்தவன் என்று கொள்ளவே ஒருவாறு தெளிவைத் தரும்.

அவ்வாறெனின், ஆதிகாலத்தில் மனிதன் மாற்றங்கண்டானென்றால் அது ஆசையாகிய எண்ணத்தினாலேயே எனலாம். உடற் பயிற்சியாகிய சுயநலமுங் கூட; ஆதிகால மனிதன், உதய கால மனிதன், சுற்றுச் சார்புகளின் தன்மைகளை, சூழ் நிலைப் பொருள்களின் தன்மைகளை, பயன்களை அறிந்திருக்க முடியாது, அவ்வளவு அறிவுத் திறன் இல்லை,

மேலும், “தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள இது தான் தகுதியான பொருள்” என்பதையும் அறிந்திருக்க முடியாது.

ஏதோ ஒரு பொருளை உண்டபிறகே, “அது பசியைப் போக்கும் பொருள்” என்பதைக் கண்டிருக்க வேண்டும்.

முதன் முதலாக, எந்தவொரு பொருளையும் பார்க்கவும், தொடவும், உபயோகப் படுத்தவும் சுயநலமும் அறிவுமல்லாத ஒரு எண்ணப் போக்கே இருந்திருக்க வேண்டும்; அந்த எண்ணப் போக்கையே ஆசையெனக் குறிப்பிடுவோம்.

அது, தனித்த ஆசையாக ஒரு [illegible] லும், சில இடங்களில் சுயநலத்தின் ஊக்குதலால் எழுந்த ஆசையாகவும் சுயநல ஆசையாகவும் காணப் படுகின்றது.

அவ்வாசை மட்டும் மனிதனிடத்தில் இயற்கையாகத் தோன்றாதிருக்குமேயாயின் இன்றைய வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டிருக்கவே முடியாது. இன்றும் ஆதிகால மனிதர்களின் நிலையிலேயே இருந்திருப்போம்.

சாதாரணமாக இத்தகைய ஆசையாகிய எண்ணம் மனமிடத்திலில்லை எனின் புலன்களைக் கூட பயிற்றுவிக்க வியலாது.

தொடக்க கால மனிதன் முதன் முதலில் இயற்கை ஊக்கியாகிய பசியைப் போக்கவே முனைந்திருக்க வேண்டும். இத்தகைய சுய தேவையாகிய உடல் தேவையாகிய பசியை—ஆசையாகிய எண்ணமே பூர்த்தித்தது என்பதை உன்னிக் காணுங்கால் தோற்றும்.

சுய தேவையே முதலாயமைந்ததெனின் அதுவும் முழுதும் பொருந்துவதில்லையாகக் கூடும்.

ஏனெனில், பசி மிகுந்துள்ள இருவரும் உடனே பசியைப் பூர்த்தி செய்து கொள்ளுவதில்லை. இருவரும் இரு விதத்தில் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர்.

ஒருவன் திருடுவதனால் பூர்த்தி செய்து கொள்ளுகின்றான். மற்றொருவன் கேட்டு வாங்கி உண்கின்றான்.

சுய நலத்திற்கு முன்பும் ஒரு வித மனப்போக்கு இருந்து அவனைப் பல விதங்களில் சுய நலத்தைப் பூர்த்தி செய்து கொள்ளத் தூண்டுவதை அறியலாம். ஆகவே, அத்தனை மனிதர்களும் ஒருவருக்கொருவர் அடிப்படையில் பல மனப் போக்கினை யுடையவர்கள்.

எனவே, அத்தகைய மனப் போக்கை, வரம்பின்றி செல்லும் மனப் போக்கை, சிலவற்றிற்குச் சென்றும் பிறவற்றை வெறுத்தும் எண்ணக்கூடிய மனப் போக்கை, தீமையை, நல்லதை ஆராயாது கொள்ளும் ஆரம்ப எண்ணப் போக்கை, தேவையைப் பூர்த்தித்த ஒரு பொருளைப் பின் அதே தேவைக்குப் பயன்படாதிருக்கச் செய்யவும், ஒரே தேவைக்குப் பல காலங்களில், பல பொருள்களைப் பயன்படுத்தவும் திறன் வாய்ந்ததான எண்ணத் துவக்கத்தை 'ஆசை" எனவுரைத்தலே மிகவும் பொருந்தக் கூடியதாகும்.

உலகிலுள்ள அத்தனை மனிதர்கட்கும் ஆசையாகிய மனப் போக்கு, எண்ணப் போக்கு உண்டு. ஆனால், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளில் உண்டு அது, அவ்வாசை, பகுத்தறிவு உதயத்தின் பாலபாடமே யன்றி, பகுத்தறிவு ஆடையின் (நூல் ஆடை) பஞ்சேயன்றி தனித்ததன்று. இவ்வாசையாற்றான் புலன்களைப் பயிற்றுவிக்க முடிகின்றது என்பதை, முன்னமே குறிப்பிட்டுள்ளோம்.

அறிவுத் தொடக்கத்தின் விரிவான ஆசையாகிய எண்ணம் சுய நலத்தைப் பூர்த்திக்கின்றது.

மனிதன், தொடக்க காலத்தில் மிருகங்களோடு மிருகமாகக் காட்டில் வசித்ததால் அவனுடைய அவா காய் கனிகளை நாடியதில் வியப்பில்லை; பின் அதுவே "பசியைப் போக்கும் உணவெனத்" தீர்மானிக்கப் பட்டது.

தேவைதான் பூர்த்திக்கப் பட்டதே பிறகாவது நிம்மதியாக இருக்கலாமல்லவா இல்லை; மேலும், ஆசை வளரத்தான் செய்தது. அதன் காரணமாகத்தான் இன்று அரிசி, கோதுமை எண்ணெய், உப்பு, மிளகாய், புளி, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களைக் கண்டு அப் பொருள்களினால், சோறு, குழம்பு, தோசை, இட்டலி, வடை, களி, உப்புமா, லட்டு, பூந்தி போன்ற உணவினைச் சமைத்து உண்ணுதற்குப் பயன் படுத்த முடிந்தது.

இந்த ஆசை நல்லதா யமைந்தமையின் அறிவும் உடன் சேர்ந்ததாக அறிக. அதன் காரணமாக "அறுசுவை யுண்டி" உருவானது.

ஆசை முன்னேற்றத்திற்கு முதன்மையாய், அடிப்படையாய் அமைந் துதவியது. (அறிவும் சுய நலமும் ஆசையைச் சீராக்கிச் சிறப்பித்தன; பின் உயர்வு எல்லையில் அறிவே தோன்றி நின்றது)

[illegible] இரு கற்களை எடுத்து விளையாட்டாகவோ விரைவாக மோதிட அதனின்றும் நெருப்புப் பொறி ஏற்பட்டமையைக் கண்டறிந்து, அதைப் பயன் படுத்தினான்.

அவ்விதம் கற்களின் விரைவான மோதலினின்று நெருப்பை உண்டாக்கிய மனிதன் அதோடு "திருப்தி" அடைந்திருந்தால், அமைதி அடைந்திருந்தால் இன்றைய மின் சார விளக்கை நாம் கண்டிருக்கவே முடியாதல்லவா!

கற்களினால் நெருப்பை யுண்டு பண்ணிய மனிதன் அதோடு நிம்மதி அடையாது மேலும் ஆவல் கொண்டான். அவ்வாசையின் காரணமாகக் கற்களின் தீப் பொறியைப் பிறிதொரு பொருளில் செலுத்திப் பின்னர் புகையைக் கண்டு மகிழ்ந்தான். அத்துடன் அதைத் தன் தேவைக்குப் பயன்படுத்தினான்; காய் கறிகளை வேக வைத்துண்டான். பின், தன் அறிவை அறிந்து இந் நெருப்புப் பொறி அணையாது தொடர்ந்திருக்க வகை செய்துத் தன் தேவையைப் பெருக்கினான். பின்னும் ஆசை எழுந்தது (சுய நலமும் உடன் கூடியது) கல் விளக்கு, அகல் விளக்கு, குத்து விளக்கு, லாந்தர் விளக்கு முதலியவாக மின்சார விளக்குகள் காணுமளவிற்கு உயர்ந்தான்.

(வரும்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros.

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# கோயமுத்தூர்-கோட்டை

[திரு C M இராமச்சந்திரன் செட்டியார் பி. ஏ., பி. எல்]

(முன் தொடர்ச்சி)

அதைக்கேட்டு ஆங்கில தளகர்த்தன் கோயமுத்தூர் வந்து தன் சேனையைத் திரட்ட ஆரம்பித்தான். செப்டம்பர் 18 முதல் 26 ம் தேதி வரை அச்சேனை கோயமுத்தூரிலேயே யிருந்தது. இதற்குள் திப்புசுல்தான் ஈரோட்டைப் பிடித்துக் கொண்டான். பிறகு திப்புவுக்கும் மெடோஸுக்கும்சேலத்திற் கருகில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. திப்புவின் சேனைத் தலைவன் கமுருதீன் என்பவன் கோயமுத்தூரை முற்றுகை யிட்டான். கோயமுத்தூர் கோட்டைக்குள் இருந்த மேஜர் சாமர்ஸ் (Major chalmers) என்பவன் தன்னால் தாங்க முடியாமல் சரண் அடைய வேண்டி வந்தது சாமர்ஸையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் கைதி செய்துஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பி விட்டார்கள். இதற்குள் கவர்னர் ஜெனரலான லார்ட் கார்ன்வாலிசே தலைமை பூண்டு ஸ்ரீரங்கப் பட்டணத்தின் மீது படை எடுத்துச் சென்றான். உடனே சமாதானம் ஏற்பட்டு விட்டது. அதன்படி கோயமுத்தூர் திப்புவிடமே நின்று விட்டது

ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் அடிக்கடி கோயமுத்தூருக்கு வந்திருந்து அரசாங்க வேலைகளை நடத்தி வந்து இருக்கிறார்கள். அவ்விதம் திப்பு சுல்தான் கோயமுத்தூரில் ஒரு தடவை இருந்த போது 8 நாளைகளுக்குள்ளாக ஈஸ்வரன் கோயிலுக் கருகே ஒரு பள்ளி வாசல் கட்டி முடித்தானும் அதற்கு மானியமும் ஏற்பட்டிருந்தது.

அந்தக் காலத்தில் கோயமுத்தூருக்கு சலாமாபாத் என்ற பெயரும் போத்தனூருக்கு ஹூசேனபாத் என்ற பெயரும் கொடுத்தானும். பேரூர் கோயிலுக்கு இருந்த சர்வ மானியத்தில் 1783 ல் அரைப் பகுதியை ஜப்தி செய்து மிகுதியை மாத்திரம் கோயிலுக்குக் கொடுத்து வந்தான். 1790-91 ம் ஆண்டுகளில் ஆங்கிலர் வசம் வந்தபோது அவைகள் மறுபடியும்முழு மான்யம் ஆக்கப் பட்டன. 1792 ல் திப்பு கைக்குள் போனபோது மறுபடியும் அரை மான்யம் ஆகி 1796 ல ஆங்கிலரிடம் சர்வ மானியம் ஆய்விட்டது.

ஹைதர் காலத்தில் 40 ஆண்டுகளாக மாதண்ணன் என்ற ஒரு லிங்காயத்துத் தலைவன் கோயமுத்தூரைப் பரிபாலித்து வந்தான். அப்போது ஊரில் 3200 வீடுகள் இருந்து ஊர் சிறப்புற இருந்தது. 1792 ல் திப்புசுல்தான் கோட்டையை இடித்து விட்டான். அடிக்கடி யுத்தம் நடந்து வந்ததால் திப்பு இறக்கும் போது கோயமுத்தூரில் 2000 வீடுகளே இருந்தன. திப்புவுக்கும் ஆங்கிலருக்கும் நடந்த நான்காம் யுத்தத்தில் கோயமுத்தூர் எவ்வித பாடும் படவில்லை ஸ்ரீரங்கப் பட்டணம் முற்றுகையில் 1799 ல் திப்பு சுல்தான் இறக்கவே, கோயமுத்தூர் ஆங்கிலர் வசம் வந்து விட்டது.

இவ்வூர் ஆங்கிலர் ஆட்சிக்குள் வந்த முதல் ஆண்டு 1800ல டாக்டர் புக்கானன் என்ற ஒரு ஆங்கிலன் யாத்திரை செய்து வந்து கோவையைக் கண்டு அதைப்பற்றி எழுதி யிருக்கிறான். முன்னொரு காலத்தில் இது ஒரு மலசர் பதியாக இருந்ததும் அவனுக்குக் கோனியம்மன் கிராம தேவதையாக இருந்ததும் மலசர் தலைவன் கோயன என்பவனைக் கொண்டு கோயம்பதி என்ற பெயர் ஏற்பட்டதும் அம் மலசரிடம் அனுமதி பெற்று ஒரு வேளாளன் ஊர் கட்டினதும் முதலியவைகளை அவன் எழுதியிருக்கிறான். அவ் வாங்கிலன் வந்த காலத்தில் கொத்துக்கார காளியப்பன் இவ்வூர்த் தலைவனாக இருந்தான் என்றும் அவன் மைசூருக்குக் கப்பம் கட்டி வந்தான் என்றும் சொல்லியிருக்கிறான்.

ஆரம்பத்தில் கோவை இச்ஜில்லாவிற்கு தலைநகராக இருக்கவில்லை. 1804 ல் தான் கோவை ஜில்லா தனியாக ஏற்பட்டு அதற்கு காரோ (Carrow) என்பவர் கலெக்டர் ஆனார். அப்போது தான் கோவை தலைநகராயிற்று ஆங்கிலர் கைக்கு வந்த பிறகு கோயமுத்தூர் வெகு சீக்கிரமாக அபிவிருத்தி யடைந்து வருகிறது. 20-11-96 ல் நகர சபை ஏற்பட்டு இப்பொழுது ஏறக்குறைய ஒரு லக்ஷம் ஜனத்தொகை இருப்பதாக ஆகிவிட்டது. ஊரின் பரப்பும் மிகவும் பெருக விட்டது. ஆனால், கோட்டையிருந்த இடம் யாதொரு சின்னமும் இல்லாமல் ஊரின் ஒரு பக்கமாகி பெயர் மாத்திரத்தில் இருக்கிறது.

மூன் மைசூர் யுத்த காலத்தில் கோட்டையிலிருந்த கோயில் உற்சவ விக்கிரகங்களை ஊருக்குள் புதைத்து விட்டு ஓடி விட்டார்கள், அவ் விஷயம் வெகு காலம் தெரியாமல் இருந்தது.

30 வருஷங்களுக்கு முந்தி ஒருவர் அஸ்திவாரம் தோண்டும்போது அவைகள் கிடைத்தன.

அரசாங்கத்தார் அவைகளைக் கைப்பற்றிக் கொண்டனர். தேவஸ்தான சபையார் அவைகளைக் கேட்டும் சாக்ஷியில்லாமல் பெற முடியவில்லை. சட்டப்படி ஏலம் போட்டதில் அரசாங்கத்தாரே அவைகளை 1000 ரூபாய் வரைக்கும் கோரி எடுத்துக் கொண்டார்கள். அப்போது அவ் விக்கிரகங்களை ஆங்கிலக் கண்காக்ஷி சபைக்கு அனுப்பி விட்டார்கள். அவ் விக்கிரகங்கள் வெகு அழகாக இருந்தன. கோட்டையில் இப்போது கோட்டை ஈஸ்வரன் கோயிலும் கோட்டைப் பெருமாள் கோயிலும் தவிர, வேறு சின்னங்கள் காணமுடியாது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அடிப்படையிலேயே மாற்றங்களைச் செய்து கொள்வது நல்லது. அதாவது ஒருவர் (எப்பாலவராயினும்) பலரை மணக்கும் தவறுக்கு இத் திருமண முறை இடந்தராமல் இருப்பது நல்லது.

இப்புதிய திருமண முறையின்படி மணப்பவர் தம் கூட்டுக் குடும்பத்தி லிருந்து இயல்பாகவே பிரிந்து விடுவர். இதனால் பெண்களுக்குக் கூட்டுக் குடும்பங்களில் சொத்துரிமை உண்டாகிறது. எனவே, இத் திருத்தம் வரவேற்கத் தக்கதாகும்.

இம் முறை, வெவ்வேறு சமயத்தவர் சமய மாற்றமின்றி மணந்து கொள்ள இடந் தருவதும், திருமண வயதை 21 க்கு உயர்த்தி இருப்பதும் நல்ல திருத்தங்களே.

—மெய்கண்டான்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகள் விளையாட்டில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஆட்சியாளர்கள் வருங்காலச் சமுதாயத்தைக் கண்டு பெருமை படத்தக்க அளவுக்கு எப்படி யெப்படி உயர்த்த வேண்டுமோ அப்படி யப்படி யெல்லாம் உயர்த்தப்படப் வேண்டுமே யல்லாது பழைய நிலையிலே தங்க வைத்திருத்தல் ஆகாது.

மனநூலறிஞர்களைப் பெருக்கி, பிள்ளைகளிடம் காணும் திறமைகளை அளவிட்டுத் திறமைக்கேற்ப பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

பாடசாலையை ஏட்டுக் கல்விக் கிடமாக்காது எக் கல்விக்கும் நிலைக்களமாக்கி அங்கிருந்து உருவாக்கப்படும் மாணவர்கள் அகில உலகெங்கணும் அரும் பணியாற்றிப் புகழ் பெறவேண்டும்.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# பொன் மொழிகள்

கடவுளும் உலகமும் பிரிவின்றி ஒன்றுபட்டிருத்தலால், 'கடவுள் வேறு; உலகம் வேறு' என்று சொல்வது தவறு. உலக இன்பத்தைத் துறப்பதும் 'உலகம் பொய்' என்று கருதுவதும் முறையே கடவுளின்பத்தைத் துறப்பதும், கடவுளைப் பொய் என்று கருதுவதுமாகும்.

திரு. வி. க.

கல்வியும், புலமையும் சீரிய முறையில் பெருகின், அன்பகை, அச்சம், குற்றம் முதலிய சிறுமைகளின்றி, உரிமையுடனும் சகோதர நேய உணர்வுடனும் நல்வாழ்வு பெற்று இயற்கை இன்பம் நுகரும்.

திரு. வி. க

அரசியல் வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறக் கூடும். ஆனால், ஆசைக்கும், சினத்திற்கும் அவன் அடிமையாயிருப்பின், உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணர அவனால் இயலாது.

'விவேகானந்தர்'

நம்மிடம் பகைமை வளர்ப்பதற்குச் சமய உணர்ச்சி இருக்கிறது. ஆனால் அந்தச் சமய உணர்ச்சி அன்பு செய்யும் அளவுக்கு இல்லை.

'ஸ்விப்ட்'

அறிவு என்பது நமக்குத் தேவையான புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதிலே மட்டும் அடங்கியிருப்பதல்ல. நமக்குத் தேவையல்லாத பழைய கருத்துக்களை எடுத்தெறியச் செய்யும் காரியமும் அடங்கியிருக்கிறது.

'ஜேம்ஸ் லவல்'

பத்திரிகை அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குறள் அச்சகம் மாம்பாக்கம்; ... (சென்னை)